**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.134/2019 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா. 4 |
| Name : | மணியரசன் |
| Father's/Husband Name: | பிச்சைபிள்ளை |
| Village : | சித்தளி |
| Taluk : | ஆலத்தூர் |
| Age : | 39 / 2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 27.08.2024

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( 1ம் எதிரி – மனோஜ்குமார், 2ம் எதிரி – ராஜேஸ், ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் சித்தளியில் மளிகை கடை வைத்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. எங்கள் ஊரை சேர்ந்த தாமரைச்செல்வனும் நானும் சித்தளிக்கு போய் கொண்டு இருக்கும் போது எனது அத்தை செல்லமாளின் நகை காணாமல் போனது சம்மந்தமாக ஏற்கனவே புகார் அளித்திருந்தோம். அது சம்மந்தமாக பேரளியில் பைபஸ் அருகில் வைத்து நானும் தாமரைச்செல்வனும் கையொப்பம் செய்தோம். மற்ற விவரம் எதுவும் எனக்கு தெரியாது. ( **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் மற்றும் சாட்சியாக உள்ள முதலாவது கையொப்பம் அது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) போலீஸ் விசாரணையில் கடந்த 12.09.2017ம் தேதி நானும் எங்கள் ஊரை சேர்ந்த தாமரை செல்வனும் பேரளி பஸ்ஸ்டாப்பில் நின்று பேசிக்கொண்டு இருந்த போது 12.00 மணியளவில் TN 45 AX 1362என்ற பதிவு எண் கொண்ட இரு சக்கர வாகனத்தில் வந்த 29 வயது மதிக்கத்தக்க நபரை எவ்வித ஆசை வார்த்தையோ, அச்சுறுத்தும் இல்லாமல் தானகவே முன்வந்துபோலீசார் விசாரித்த போது அவர் தன் பெயர் ராஜேஸ் என்றும் சம்பவம் சம்மந்தமாக ஒப்புக்கொண்டு அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலம் எங்கள் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டது என்றும் அதற்கு அத்தாட்சியாக நானும், தாமரைச்செல்வனும் சாட்சியாக கையொப்பம் செய்ததாக சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதராக உண்மை சம்பவத்தை மறைத்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததுபற்றி தெரியாது என்றும் அதில் உள்ள சங்கதிகளை தெரியாது என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

3(i) எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது. அதனால் குறுக்கு விசாரணை இல்லை.

**மறு விசாரணை :** இல்லை

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-
District Munsif Cum Judicial Magistrate,
Veppanthattai,
(FAC) Additional Mahila Court,
Perambalur.